1981 மார்ச் 9]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

@ 490 ஆம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment :—

"In clause 2, sub-clause (1), for the words "for a period of five years and nine months" *insert* the words "few years".

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா?

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும்முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.